கோவிட்-19 தடுப்பூசி

# உண்மைகளைப் பெறுக.

## ஒரு முகமூடியை அணிதல்



### ஒரு ˜கமூடியை அணிவது எப்போதும் ஆகப் பாதுகாப்பானதாகும்

கோவிட்-19 இப்போதும் ஒவ்வொரு நாளும் முதியோர், பெரியவர்கள், இளைஞர்கள், சிறுவர்கள் ஆகியோர் உட்பட ஆயிரக் கணக்கானோரைத் தொற்றுகிறது. **உமது பகுதியில் முகமூடிகள் தேவையா என்பது எவ்வாறு இருந்த போதிலும், நீர் ஒரு முகமூடியை அணிந்தால் நீரும் உமது குடும்பமும் ஆகப் பாதுகாப்படையலாம்.**

### முகமூடிகள் கோவிட்-19 இற்கு எதிராகப் பாதுகாக்கின்றன

கோவிட்-19 மிக எளிதாகப் பரவுகிறது என்பதால், ஒரு முகமூடியை அணிவது உம்மையும் உமது நண்பர்களையும் குடும்பத்தையும் உமது சமூகத்தையும் பாதுகாக்கிறது.

- ✔ நீர் ஒரு முகமூடியை அணியும் போது, வைரசு வளியில் இருந்தால் நீர் அதை மூச்செடுத்து அதனால் நோயுறும் சாத்தியம் குறைவு.
- ✔ நோயுற்றதாக உணர்வது எல்லாருமல்ல என்பதால், கோவிட்-19 இனால் நோயுற்று அதை அறியாதிருக்க வாய்ப்புண்டு. இந்நிலையில், ஒரு முகமூடியை அணிதல் உம்மிடமிருந்து ஏனையோருக்கு வைரசுப் பரவும் சாத்தியத்தைக் குறைக்கிறது.

### முகமூடிகள் பலனுள்ளவையாக முறைப்படி அணியப்பட வேண்டும்.

- உமது மூக்கினதும் வாயினதும் மேல் உமது முகமூடியை அணிக
- மேலிருந்து அல்லது பக்கங்களிலிருந்து காற்று வெளியேறாதிருப்பதை உறுதி செய்து கொள்க
- உமது முகமூடியைத் துப்புரவான கைகளால் அணியவும் கழற்றவும் செய்க
- உமது முகமூடி உமது முகத்தில் இருக்கும் போது அதைத் தொட வேண்டாம்
- உமது மீளப் பயன்படுத்தக்கூடிய முகமூடியை குறைந்த பட்சம் நாள் தோறும் துப்புரவாக்குக
- உமது ப்புறப்படுத்தக்கூடிய முகமூடியை ஒரு முறை மட்டும் பயன்படுத்துக

### தடுப்பூசிகள் ஆகக் கூடிய பாதுகாப்பை வழங்குகின்றன

- நீர் உம்மையும் உமது சமூகத்தையும் பாதுகாக்க எடுக்க வேண்டிய ஆக முக்கியமான படிமுறை தடுப்பூசி பெறுவதாகும்.
- முழுமையாகத் தடுப்பூசி பெற்ற பின்னர், நீர் கோவிட்-19 இனால் நோயுறுவது சாத்தியமற்றது, நீர் நோயுற்றாலும், நீர் ஆபத்தானளவு சுகவீனமடையாமல் தடுப்பூசி பாதுகாக்கும்.

### தடுப்பூசி பெற்றோரும் ஒரு முகமூடியை அணியும் போதே ஆகப் பாதுகாப்படைகின்றனர்

தடுப்பூசி பெற்ற பின் ஆட்களுக்கு கோவிட்-19 நோயேற்படுவது வழமைக்கு மாறானது, ஆனால் அது நிகழலாம்.

ஒரு தடுப்பூசியைப் பெறுவதும் ஒரு முகமூடியை அணிவதும் கோவிட்-19 இனால் நோயுறுவதையும் அதனை மற்றையோருக்குப் பரப்புவதையும் தவிர்க்க ஆகச் சிறந்த வழியாகும்.

NRC-RIM
National Resource Center for Refugees, Immigrants, and Migrants

இன்னும் தகவல்களுக்கு: cdc.gov/coronavirus